Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 16, 2023

புதன்கிழமை 16 ஒகஸ்ட், 2023 | ஒளி: 09 கதிர்: 063 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE



## நாளை முதல் விடுமுறை

அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக நாளை (17) மூடப்படும் என்று, கல்வியமைச்சு செவ்வாய்க்கிழமை (15) அறிவித்தது.

இரண்டாம் தவணையின் முதற்கட்ட விடுமுறையே வழங்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ள அமைச்சு, எதிர்வரும் 28ஆம் திகதி முதல் இரண்டாம் தவணையின் 2ஆவது கட்ட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

# பனிக்கன்குள விபத்தில் மூவர் பலி; எண்மர் காயம்

### 3 வாகனங்கள் மோதி விபத்து:

சண்முகம் தவசிலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியின் பனிக்கன்குளம் பகுதியில் மூன்று வாகனங்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் பலியானதோடு எட்டு பேர் காயமடைந்துள்ளனர்

கொழும்பு, வெல்லம்பிட்டி பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பொருட்களை ஏற்றியவாறு இரண்டு சிறிய ரக லொறிகளில் சுமார் பதினைந்து பேர் அளவில் பயணித்துள்ளனர்.

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியின் பனிக்கன்குளம் பகுதியில் செவ்வாய்க்கிழமை (15) அதிகாலை வேளை இவர்கள் பயணித்த போது ஒரு லொறியின் ரயர் காற்றுப் போன நிலையில், அவர்கள் இரண்டு வாகனங்களையும் நிறுத்தி விட்டு, ரயர் மாற்றியுள்ளனர்.

இவ்வாறு இவர்கள் ரயர் மாற்றிக்கொண்டு இருந்த போது, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்த கே.டி. எச் ரக வாகனம், அதிகாலை மூன்று மணியளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதியதுடன், குறித்த வாகனம் முன்னால் நின்ற மற்றைய வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

தொடர்ச்சி P2



# தலைவி பதவி ஆசையில் தண்ணீரில் விஷம் கலப்பு

### அருந்திய அறுவரில் ஒருவராக அகப்பட்டார்

குளியாப்பிட்டி, நாரம்மல பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் மாணவிகள் ஆறு பேரின் தண்ணீர் போத்தல்களில் விஷம் கலந்ததால், அவர்கள் நாரம்மல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக நாரம்மல பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களது தண்ணீர் போத்தல்களில் யாரோ ஒருவித விஷத்தை கலக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக நாரம்மல பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

தொடர்ச்சி P2

ஒன்றிணைந்த நாட்டுக்குள்

# 13இன் அதிகார பரவலாக்கல்


### நடைமுறைப்படுத்த சஜித் எதிர்பார்ப்பு

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில், ஒன்றித்த நாட்டுக்குள் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

விழுமியம்மிக்க சமூகத்துக்கான பிக்குகள் ஆலோசனை பேரவையின் இரண்டாம் கட்டம், காலி மாவட்டத்தை இலக்காகக் கொண்டு காலி நகரசபை கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

மகா சங்கத்தினரின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் சிறந்த முறையில் பெற்றுக்கொண்டு, பாதகமான காரணிகளை நீக்கி, சாதகமான காரணிகளுடன் சமய சேவை, சமூக சேவை, முற்போக்கு அரசியல் பயணத்தை முன்னெடுக்கும் சக்தியாக ஐக்கிய மக்கள் சக்தி திகழ்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# மடுமாதாவின் திருவிழாவில் ஜனாதிபதியும் பங்கேற்பு



மன்னார், மருதமடு மாதாவின் ஆவணி மாத திருவிழா திருப்பலி செவ்வாய்க்கிழமை (15) காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகியது.
மடு மாதாவின் ஆவணி மாத திருவிழா, ஒவ்வோர் ஆண்டும் ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, மாதாவின் விண்ணேற்பு தினத்தன்று நடைபெறுகிறது. இந்தத் திருவிழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பங்கேற்றிருந்தமை விசேட அம்சமாகும்.
எஸ். றொசேரியன் லெம்பேட்

சில கனரக வாகனங்களுக்கான

# இறக்குமதி கட்டுப்பாட்டில் தளர்வு

பொது போக்குவரத்து சேவைக்காக பயன்படுத்தப்படும் பஸ்கள், லொறிகள், பாரவூர்திகள் உள்ளிட்ட கனரக வாகனங்களின் இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தியுள்ளது.




தொடர்ச்சி P2

# பிரபாகரனையும் சிங்களவர் என்பர்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

க அகரன்

திருகோணமலையை ஆக்கிரமிக்க இராவணன் சிங்களவர் ஆனார்; எதிர்காலத்தில் வல்வெட்டித்துறையை ஆக்கிரமிக்க பிரபாகரனையும் சிங்களவர் என்பார்கள் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





# 77ஆவது சுதந்திர தினம்

இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினம், கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் செவ்வாய்க்கிழமை (15) கொண்டாடப்பட்டது.

அரசியல்வாதிகள் மாறினாலும்


# மாறாத சுற்றுலா கொள்கை வரும்



அரசியல்வாதிகள் மாறினாலும், மாறாத சுற்றுலாக் கொள்கை விரைவில் முன்வைக்கப்படும் என்றும் துறைசார் ஆய்வாளர்களால் தயாரிக்கப்பட்ட குறித்த கொள்கை வரைவை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 18 போலி நாணய தாள்களுடன் ஆணும் பெண்ணும் கைது



கட்டுநாயக்க பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில், 5 ஆயிரம் ரூபாய் பெறுமதி மதிக்கத்தக்க 18 போலி நாணயத்தாள்களுடன் இரண்டு சந்தேகநபர்களை செவ்வாய்க்கிழமை (15) காலை கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# உங்களை திசைதிருப்ப அனுமதிக்காதீர்கள்

### மடு திருத்தலத்தில் பேராயர் உடைக்குவே ஆண்டகை உரை

எஸ்.றொசேரியன் லெம்பேட்



இலங்கை மக்கள் பொதுவாக நல்லவர்கள்; சகிப்புத்தன்மை கொண்டவர்கள் என்றும் குறைவாக உள்ள சிறு குழுவினர் உங்கள் மீது எதிர்மறையாக செல்வாக்கு செலுத்தவோ, உங்களைதிசைதிருப்பவோ அனுமதிக்க வேண்டாம் என்றும் பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 'நைட்டி' அணிந்து வந்து நடுநிசியில் தாக்குதல்

### அரச உத்தியோகத்தரின் வீடு சேதம்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் உள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரது வீட்டின் மீது, இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆறு பேர் கொண்ட வன்முறைக் கும்பல், ஆயுதங்களுடன் நுழைந்து தாக்குதல் நடத்தியதுடன், மோட்டார் சைக்கிளையும் தீயிட்டு எரித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# ரேடார் திட்டத்தால் ரூ. 78 மில்லியன் நட்டம்

உலக வானிலையியல் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்ட ரேடார் கட்டமைப்பை கோனகல பிரதேசத்தில் அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தோல்வியடைந்த வேலைத்திட்டம் காரணமாக, அரசாங்கத்துக்கு 78 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதாக அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (கோப் குழு) அண்மையில் தெரியவந்தது.

தொடர்ச்சி P2



# நுரைச்சோலையில் திருத்தப்பணி நிறைவு

நுரைச்சோலை 'லக்விஜய' நிலக்கரி அனல்மின் நிலையத்தின் 2ஆவது மின்பிறப்பாக்கும் அலகின் திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், அந்த அலகு மின்நிலையத்தின் செயற்பாட்டுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

தொடர்ச்சி P2



# படையினருக்கு கோழி இறைச்சி இறக்குமதி



படையினருக்கு தேவையான கோழி இறைச்சியை இறக்குமதி செய்ய, பாதுகாப்பு அமைச்சு விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி அனுமதி அளித்துள்ளதாக தெரியவருகிறது.

நாட்டில் கோழி இறைச்சிக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் தட்டுப்பாடு தொடர்பாக பல்வேறு நிறுவனங்களுக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

தலைமன்னார் முதல் கோட்டை வரை

# செப்.15 முதல் கடுகதி ரயில் சேவை ஆரம்பம்

### மடு மாதா திருத்தல திருவிழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னாரை எரிசக்தி மையமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தலைமன்னாரிலிருந்து கொழும்பு வரையான நகர்சேர் கடுகதி ரயில் சேவை செப்டெம்பர் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# தலைவி பதவி...

சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள மாணவிகளின் குடிநீர் போத்தலில் விஷத்தை கலந்துள்ள மாணவியும் அவர்களில் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்துக்குரிய மாணவி, திங்கட்கிழமை காலைக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல், வகுப்பறையில் தங்கி, பல மாணவிகளின் குடிநீர் போத்தல்களில் களைகொல்லி மருந்தை கலக்கியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி காட்சிகளை ஆய்வு செய்ததில், சம்பவத்தில் ஈடுபட்ட மாணவி அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மாணவியும் அதே பாடசாலையில் பத்தாம் ஆண்டில் கல்வி கற்றுவருகிறார். களைகொல்லி கலந்த தண்ணீரைக் குடித்து, வாந்தி எடுத்த மாணவிகளை பார்த்து பயந்து, தானும் அந்தத் தண்ணீரை குடித்ததாக கூறியுள்ளார்.

பாடசாலையின் மாணவர் தலைவி பதவிக்கான போட்டி நடைபெறுவதாகவும் அதனை அடிப்படையாகக் கொண்டே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தண்ணீரில் கலந்துள்ள களைகொல்லி அதிக வலிமை இல்லாததால் மாணவர்களின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

# பனிக்கன்குள விபத்தில் மூவர் பலி; எண்மர் காயம்

இந்த விபத்தில் கேடிஎச் ரக வாகனத்தில் பயணித்த சாவகச்சேரி பகுதியை சேர்ந்த ஒருவரும் ரயர் மாற்றிக்கொண்டிருந்தவர்களில் வெல்லம்பிட்டியைச் சேர்ந்த இருவருமாக மூவர் உயிரிழந்துள்ளதுடன், குறித்த விபத்தில் மேலும் எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர். உயிரிழந்த மூவரின் சடலங்களும் மாங்குளம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் காயமடைந்தவர்களில் மூவர் மாங்குளம் ஆதார வைத்தியசாலையிலும் ஐவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# 13இன் அதிகார பரவலாக்கல்

நாட்டிலுள்ள ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களிலும் சமய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும், சமய வழிபாட்டுத் தலங்களுக்கு சமய நிதியமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு சன்மார்க்க சமுதாயத்தை உருவாக்க உதவுவதாகவும் தெரிவித்தார்.

விகாரைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேலைத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருவதாகவும், மத வழிபாட்டுத் தலங்களில் சூரிய மின்சக்தித் திட்டத்தை வெறுமனே கூறாமல் யதார்த்தமாக நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில், ஒன்றித்த நாட்டுக்குள் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம் என்றும், நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள விசேட இடம் எப்போதும் பாதுகாக்கப்படும் எனவும், ஏனைய மதங்களும் சமயங்களும் பாதுகாப்பாக இருக்க செயற்பட வேண்டும் எனவும், நாட்டில் பிளவு ஏற்பட்டால், நாட்டின் தேசிய பாதுகாப்பு பற்றி பேசுவதில் அர்த்தமில்லை என்றும், அந்தப் பிரிவினையை இல்லாதொழிக்க வேண்டும் என்றார். நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக அனைத்து மக்கள் சமூகங்களும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்றும், அந்த இலக்கை நோக்கி ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் செயற்படும் என்றும் குறிப்பிட்டார்.

மிஹிந்தலை புனித பூமியை 24 மணித்தியாலங்கள் இருளில் மூழ்கடித்து வைத்ததன் மூலம் தற்போதைய அரசாங்கம் அரசியலமைப்பை அப்பட்டமாக மீறியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

75 வருடங்களாக அரசியல்வாதிகள் ஆளுங்கட்சியில் இருக்கும் போதுதான் சேவையாற்றினர் என்றும், அவ்வப்போது இருந்த எதிர்க்கட்சிகளும் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசையில் மட்டுமே செயல்பட்டதாகவும் குறிப்பிட்டார். தான் ஏன் ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை என பலரும் விமர்சிக்கின்றனர் என்றும், திருடர்களை வைத்து அரசியல் செய்ய வேண்டும் என்ற அச்சத்தாலும், வெட்கத்தாலும் தான் ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். புதிய ஆணையின்றி நாட்டின் பொறுப்பை ஏற்க மாட்டேன் என்றும், மகா சங்கத்தினரின் ஆசிர்வாதங்களை பெற்றுக் கொண்டு கொள்கைகளை மதித்து கொள்கைசார் தூய்மையான பயணத்தை மேற்கொள்ளத் தயார் என்றும் கூறினார். நாட்டுக்கு தேவை தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் அல்ல; நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய நிகழ்ச்சி நிரலே தேவை. சம்புத்த சாசனத்தையும், நாட்டையும் பலப்படுத்தி, தாய்நாட்டை மீண்டும் உலகத்தின் முன் பிரகாசிக்கச் செய்வதற்கு மகா சங்கத்தினர் வழங்கும் பங்களிப்பிற்காக மகா சங்கத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

# இறக்குமதி கட்டுப்பாட்டில் தளர்வு

இது தொடர்பாக நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில், பஸ்கள், லொறிகள், பௌசர்கள், பாரவூர்தி உள்ளிட்ட கனரக வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப்போக்குவரத்து அல்லாத கார் உள்ளிட்ட வாகனங்களை இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடை தொடரும் என்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வாகனங்களுக்கான இறக்குமதி தடை விதிக்கப்பட்டது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தினாலும், வாகனங்கள் மீதான சில கட்டுப்பாடுகளை திரும்பப் பெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அரச நிறுவனங்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் 2024 ஆம் ஆண்டிலும் அமுலில் இருக்கும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

# 18 போலி நாணய...

கொழும்பு, மாளிகாவத்தை பிரதேசத்தில் வசிக்கும் 38 வயதுடைய பெண் ஒருவரும் நிகவெரட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 26 வயதுடைய இளைஞருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கா, கோவின்ன பிரதேசத்தில் அலைபேசி திருத்தும் நிலையம் ஒன்றை நடத்தி வரும் குறித்த இளைஞரும் குறித்த பெண்ணும் அதே பகுதியில் உள்ள தங்கும் விடுதியில் தற்காலிகமாக தங்கியுள்ளனர்.

கட்டுநாயக்க 18 ஆவது மைல்கல் பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றில் இருந்து உணவு பெற்ற இந்த பெண் 5 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாளை கொடுத்துள்ளார். இது தொடர்பில் உணவக உரிமையாளர் கட்டுநாயக்க பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

குறித்த பெண்ணை கைது செய்த கட்டுநாயக்க பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நீண்ட விசாரணைகளின் பின்னர் அலைபேசி பழுதுபார்ப்பவரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதன்போது, அவரின் வசம் இருந்த 5 ஆயிரம் ரூபாய் மதிக்கத்தக்க 17 போலியான நாணயதாள்கள், இந்தத் தாள்களை அச்சடிக்கப் பயன்படுத்தப்பட்ட கலர் ஸ்கேனர் மற்றும் பல கணினி சாதனங்களும் கைப்பற்றப்பட்டன.

கட்டுநாயக்காவை அண்மித்த பகுதிகளில் இந்தப் போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் இருக்கக்கூடும் என்பதால், இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அப்பகுதி மக்களுக்கு கட்டுநாயக்க பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# ரேடார் திட்டத்தால் ரூ. 78 மில்லியன் நட்டம்

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (15) வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2019, 2020, 2021ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை குறித்துக் கலந்துரையாடப்பட்டபோதே இந்த விடயம் தெரியவந்தது. 2008ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த வேலைத்திட்டத்தில் குறித்த ரேடார் கட்டமைப்புக்காக 402 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டிருப்பதாகவும், உலக வானிலையியல் அமைப்பால் 323 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாகவும் இந்த வேலைத்திட்டத்தை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு முன்னர் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரி குறித்த இயந்திரத்தைப் பரிசோதித்துப் பார்த்ததுடன், இது இயங்கும் நிலையில் இல்லையென்பதால் அதனை நாட்டுக்குக் கொண்டு வரவேண்டாம் என்று அறிவித்திருப்பதாகத் தெரியவந்தது.

இந்தக் கட்டமைப்பு பொருத்தப்படவிருந்த இடத்துக்கான வழியை சரிசெய்வதற்காக பல வருடங்கள் சென்றிருப்பதாகவும், இதனால் இந்த இயந்திரம் காலாவதியாகும் நிலைக்குச் சென்றிருப்பதாகவும் கணக்காய்வாளர் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், இதனைக் கொண்டு செல்வதற்கான பாரம் தூக்கி மற்றும் வீதி சரிந்து வீழ்ந்தமையால் சில உபகரணங்கள் சேதமடைந்திருப்பதாகவும், எஞ்சிய உபகரணங்கள் காணாமல் போயிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் பொலிஸ் மற்றும் இலஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றின் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவந்தது. இதற்கமைய பாரிய நட்டம் ஏற்பட்டு முழுமையாகக் தோல்வியடைந்துள்ள இந்தத் திட்டத்துக்குப் பதிலாகப் புதிய தொழில்நுட்பத்துடன் வளிமண்டலவியல் திணைக்களம் சரியான கேள்விப் பத்திரங்களைக் கோரி வினைத்திறனான வேலைத்திட்டமொன்றை விரைவில் நடைமுறைப்படுத்துவது அவசியம் என்றும் குழுவால் வலியுறுத்தப்பட்டது.

தற்பொழுது நிலவும் வரட்சி நிலைமை தொடர்பில் சரியான எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் அது தொடர்பான அறிக்கை குறித்தும் இங்கு கேள்வியெழுப்பப்பட்டன. மேலும் 453 மழை மானிகள் பொருத்தப்பட்டுள்ள போதும் அதில் 73 மானிகள் இயங்க முடியாத நிலையில் இருப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

# படையினருக்கு கோழி...

இறைச்சி பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நிறுவனமும் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அவர்களின் தயாரிப்புகளுக்கு தேவையான இறைச்சியை (பச்சையான) இறக்குமதி செய்ய அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இது அனுமதிக்கப்பட்டால், இறக்குமதி செய்யப்பட்ட இறைச்சி பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்து அதன் பயனை வாடிக்கையாளருக்குச் செல்வதை உறுதி செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எவ்வாறாயினும், எந்தவொரு நிறுவனமும் இதுவரை இறைச்சியை இறக்குமதி செய்ய கோரிக்கை விடுக்கவில்லை என்று அதிகாரி மேலும் கூறினார்.

# பிரபாகரனையும் சிங்களவர்...

இது குறித்து மேலும் தெரிவிக்கையில், “இராவணன் சுமார் 3,200 ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலையை தளமாகக் கொண்ட தமிழ் சைவ மன்னன் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

இராமாயணத்தின் சமஸ்கிருத இந்துக் கதையில் இராவணன், திராவிட மற்றும் தமிழ் சின்னமாக கொண்டாடப்படுகிறார். ஈழத்தின் அரசனாகவும் சிவ பக்தனாகவும் போற்றப்படும் இராவணன், திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரத்தின் மூலகோவிலைக் கட்டியதாக இராமாயணம் சொல்லுகிறது.

இராவணன் விகாரை கட்டவில்லை என்று தெற்கில் உள்ள மக்களுக்கு நம் தாய்மார்கள் கூற விரும்புகிறார்கள். இந்த ஈழ தீவின் ஆதி பழங்கால மக்கள் தமிழர்கள் என்று இராவணனின் இருப்பு கூறுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர், “சிங்களவர்கள் வெள்ளைத் தோல் ஆரியர்கள்” என்று கூறியதையும் எமது சிங்கள மக்களுக்கு நினைவுபடுத்துகின்றோம்.

திருகோணமலையை ஆக்கிரமிக்க, இராவணன் சிங்களவனானான். எதிர்காலத்தில் வல்வெட்டித்துறையை ஆக்கிரமிக்கும் போது பிரபாகரனை சிங்களவன் என்று சிங்களவர்கள் சொல்வார்கள்.

சிங்கள மதகுருமார்கள், உளவு முகவர்கள், பொலிஸ், இராணுவம், தொல்பொருள் திணைக்களம், வனத் திணைக்களம், மஹாவலி திட்டத்தால் தாங்க முடியாத துன்பம், உளவியல் வலியை தமிழர்கள் அனுபவித்து வருகிறார்கள்.

இயற்கைக்கு ஒரு விதி உள்ளது; அதாவது ஒவ்வொரு செயலுக்கும் சமமான மற்றும் எதிர்வினை உள்ளது. விஞ்ஞானி ஐசாக் நியூட்டன் தனது ஆராய்ச்சியில் அதை நிரூபித்தார். மத ரீதியாக பல மகான்கள் ‘கர்மா’ என்று இதையே குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ் மக்களை ஆக்கிரமிப்பவர்களையும் ஒடுக்குபவர்களையும் கர்மா கவனித்துக் கொள்ளும். இலங்கையின் நிதிச் சரிவு கர்மாவின் ஒரு முனை மட்டுமே. சிங்களவர்கள் தமிழர்களுக்கு செய்த கர்மாவிற்கு இன்னும் பல விளைவுகளை காண்போம்.

இந்தத் தீவின் நில உரிமையை சீனர்களும் இந்தியர்களும் கைப்பற்றுவதை இப்போது காண்கிறோம். இந்த இரண்டு எதிரிகளுக்கும் இந்தத் தீவு ஒரு போர்க்களமாக எதிர்காலத்தில் இருக்கும். இறுதியில் தீவு முழுவதும் சாம்பலாகிவிடும். கடந்த 75 வருடங்களாக சிங்களவர்கள் தமிழர்களுக்கு செய்த கர்மாவின் ஒரு பகுதி இது.

சிங்களவர்கள் தங்கள் கர்மாவுக்கு பரிகாரம் தேட வேண்டுமானால், தமிழர்கள் தங்களை ஆளட்டும் என விட்டுவிடுங்கள். ‘செக்’ மற்றும் ஸ்லோவாக்கியா நாடுகளாக மாறுவதற்கு முன்னாள் செகோஸ்ஸ்வாக்கியா செய்தது போல் ஓர் இணக்கமான தீர்வுக்கு வாருங்கள் என்று தெரிவித்தார்.

# உங்களை திசைதிருப்ப...

மடு திருத்தலத்தின் ஆவணி திருவிழாவில் செவ்வாய்க்கிழமை (15) கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உடல் ரீதியான உணர்வு ரீதியான வடுக்களை விட்டுச் சென்ற 26 வருடங்கள் நீடித்துச் சென்ற உள்நாட்டு போரின் தாக்கங்களை நாம் மறந்து விட முடியாது. பல தடவைகளில் இந்தப் போரைப் பற்றி நான் கேள்விப்பட்டு இருக்கின்றேன்; வாசித்தும் இருக்கின்றேன்.

எனினும் 2 வாரங்களுக்கு முன்னர் யாழ். மறை மாவட்டத்திற்கு நான் மேற்கொண்டிருந்த மீட்புப்பணி விஜயத்தின் போது மக்கள் மீதும், கைவிடப்பட்ட வீடுகள் மீதும் உடமைகள் மீதும் போரின் தாக்கம் எவ்வாறு இருந்தது என்பதை இன்னும் ஆழமாக பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. மீண்டும் ஒரு போர் வேண்டாம். இன, மத, மொழி, சாதி கருத்து போன்ற வேற்றுமைகளுக்கு அப்பால் அன்பும் அமைதியும் சகிப்புத்தன்மையும் நிலை பெறுவதாக.

வெறுப்பும், விரோதமும் வேண்டாம். இது நல்லிணக்கத்திற்கான நேரம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான பயணங்கள், வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியுடன் சந்திப்பு போன்ற முயற்சிகள் ஊடாக நல்லிணக்கத்தை எட்டுவதற்கு அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம்.

அதேவேளை ஒரு வாரத்திற்கு முன்னர் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெளிவாக குறிப்பிட்டது போல அனைவரும் நன்கு அறிந்த குழப்பமான விடயங்களை போதுமான அளவில் தீர்த்து வைக்கும் வகையில் இந்த செயன்முறைகள் அமையும் என நாங்கள் நம்புகிறோம்.

மூன்று வருடங்களுக்கு முன் நான் இலங்கைக்கு வந்த போது இந்த நாட்டின் பல பாகங்களுக்கும் நான் விஜயம் செய்தேன். குறைவாக உள்ள சிறு குழுவினர் உங்கள் மீது எதிர் மறையாக செல்வாக்கு செலுத்தவோ, உங்களை திசை திருப்பவோ அனுமதிக்க வேண்டாம் .

பல்வேறு சமயங்களை சார்ந்த சமையத்தலைவர்கள் அன்பையும், சகோதரத்துவத்தையும், நோக்கிய சரியான கொள்கையை நோக்கி மக்களை வழி நடத்துவதில் முன்னனி பங்கு வகிக்க வேண்டும்” என்றார்.

# நைட்டி அணிந்து வந்து...

கல்வியங்காட்டில் உள்ள பூதரவராயர் வீதியில் உள்ள வீட்டின் மீதே செவ்வாய்க்கிழமை (15) முன்னிரவு 1.30 மணியளவில் பெண்களின் ஆடை (நைட்டி) அணிந்து வந்த ஒருவர் உட்பட்ட ஆயுதங்களுடன் வந்த மர்மக் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன்போது வீட்டின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், புத்தகப்பை என்பன தீயிட்டு கொளுத்தப்பட்டதுடன் ஜன்னல் கண்ணாடிகள், கண்காணிப்பு கமெராக்கள் என்பனவும் அடித்து நொருக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் கண்காணிப்பு கமெராக்களில் பதிவான காட்சிகளை அடிப்படையாக கொண்டு கோப்பாய் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# நுரைச்சோலையில்...

திருத்தப்பணிகள் நிறைவடைந்தமையை அடுத்து இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, செவ்வாய்க்கிழமை (15) இரவு 8 மணியளவில் தேசிய மின்கட்டமைப்புடன் குறித்த மின்பிறப்பாக்கும் அலகு இணைக்கப்படும் என்றும் சபை குறிப்பிட்டிருந்தது.

கடந்த 8ஆம் திகதியன்று நிலையத்தின் 2ஆவது மின்பிறப்பாக்கும் அலகு திடீரென செயலிழந்ததால், தேசிய மின் கட்டமைப்பில் இருந்து 300 மெகாவோட் மின்சாரம் இழக்கப்பட்டதாக மின்சார சபை தெரிவித்திருந்தது.

# செப்.15 முதல் கடுகதி ரயில் சேவை ஆரம்பம்

மன்னார் மடு மாதா தேவாலய திருவிழாவில் செவ்வாய்க்கிழமை (15) கலந்து கொண்டு உரையாற்றும் போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவித்த ஜனாதிபதி, “மடு மாதா குடிகொண்டிருக்கும் இந்த மன்னார் பிரதேசம் அதிகளவு புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைக் கொண்ட பிரதேசமாகும். இங்கு கிடைக்கும் சூரிய சக்தி, காற்றாலை மற்றும் பசுமை ஆற்றல் மூலம் மன்னார் மாவட்டத்தை எரிசக்தி மையமாக உருவாக்க முடியும். இந்தப் புனித பூமியும், வனமும் பாதுகாக்கப்படும் வகையிலேயே இந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

இப்பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளின் போது இங்குள்ள அருட்தந்தையர்களின் ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் பெறுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன்.

அடுத்த மாதம் முதல் மன்னாரிலிருந்து கொழும்புக்கு நகர்சேர் கடுகதி ரயில் சேவையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

இந்த வருடம் மடுமாதா திருவிழா கூட்டுத் திருப்பலிப் பூஜையில் ஜனாதிபதி இணைந்து கொண்டதுடன், திருவிழா திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டதை அடுத்து மடுமாதாவின் திருச்சுரூப பவனி இடம்பெற்றது. வருடாந்த மடுமாத திருவிழாவில் நாட்டின் பலபாகங்களில் இருந்தும் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

மடு மாதாவுக்கு மகுடம் சூட்டப்பட்டு 2024ஆம் ஆண்டுடன் நூறு ஆண்டுகள் நிறைவடைகிறது. அதனை நினைவுகூறும் நிகழ்வுகளை வருடம் முழுவதும் நடத்த திருத்தல நிர்வாக குழு முடிவு செய்துள்ளது.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் ஏற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து பாராட்டுக்குரியது எனவும் வத்திக்கான் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் ஆசீர்வாதமும் இதற்கு கிடைக்கும் எனவும் மடு திருவிழாவில் கலந்து கொண்ட இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி அதி வண. பிரையன் உடைக்வே ஆண்டகை தெரிவித்தார்.

# மாறாத சுற்றுலா கொள்கை...

அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதை எதிர்வரும் இரண்டு வாரங்களில் நாட்டுக்கு முன்வைப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் வீழ்ச்சியடைந்திருந்த சுற்றுலாத்துறை, தற்போது முன்னேற்றமடைந்து வருவதாகவும், ஆனாலும் நாம் எதிர்பார்த்துள்ள இலக்கை இன்னும் அடையவில்லை என்றும் குறிப்பிட்ட அமைச்சர், படிப்படியாக நாம் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு நம் நாட்டில் உள்ள ஹோட்டல் அறைகள் போதுமானதாக இல்லை. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், தற்போது நாடு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக ஸ்திர நிலையை அடைந்து வருவதால் எமது நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

புதிய சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு வரவழைக்கும் வகையில் நாட்டின் அழகிய இடங்கள் குறித்த குறும்பட விழாவொன்றை நடத்தவுள்ளதாகவும், இந்த நாட்டில் உள்ள எவரும் இதில் பங்கேற்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு சுற்றுலா செயலி ஒன்றை உருவாக்கும் பணிகள் நடந்து வருதாகவும், குறித்த செயலி, பயன்பாட்டுக்கு வந்தவுடன் சுற்றுலாப் பயணிகளுக்கு எதிரான இடையூறுகள், குறிப்பாக நிதி மோசடிகள் இதன் மூலம் தடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.











# "மேர்வினுக்கு மண்டை பழுது"



எனது பார்வையின் கீழ், முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு மண்டை பழுது உள்ளது போல் தெரிகிறது என வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இவர் அரசியலில் இல்லாத கட்சிகள் இல்லை. எல்லா கட்சியிலும் இருந்து, எல்லா கட்சியினரும் அவரை துரத்தி உள்ளார்கள். தான் இருக்கின்றார் என்பதை காண்பிப்பதற்காக இவ்வாறு மடமைத்தனமான பேச்சுகளை பேசுகின்றார்.

இவரை கணக்கெடுப்பதே மிகவும் பிழை. அவரை கவனிக்காமல் அவர் பாட்டிலேயே செல்வதற்கு விட்டுவிட வேண்டும்.

உண்மையாகவே இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு இருக்கின்றது என்றால், பொலிஸார் இவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஏனென்றால், முதலாவது, இவர் வன்முறையை தூண்டுகின்றார். இரண்டாவது, இனமோதலை உருவாக்குவதற்கு முயல்கின்றார்.

இவருக்கு இனமோதலை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு மனோநிலை பிரச்சினை என்றால், அதற்கான வைத்தியத்தை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இல்லையேல் இவரை இந்த இரண்டு குற்றத்திற்காகவும் நீதிமன்றத்தில் முன்னிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# பேலியகொடையில் வீடமைப்பு பிரச்சினைக்குத் தீர்வு



பேலியகொடை நகர அபிவிருத்தித் திட்டத்தை மேல்மாகாண அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கியதாகத் தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

உரிய அபிவிருத்தி திட்ட அறிக்கையை டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். இதன் பிரகாரம், பேலியகொடை நகர அபிவிருத்தித் திட்டம் அடுத்த வருட ஆரம்பத்தில் அமல்படுத்தப்படும் என்றார்.


பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்புக்கு மிக அருகில் அமைந்துள்ள பேலியகொடை நகரம், கொழும்புடன் இணைந்து விரைவான அபிவிருத்தியை அடைந்துள்ளது. களனி கங்கையின் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளதால், தொடர்ந்து வெள்ள அபாயத்தை எதிர்நோக்கி வருகிறது.

மேலும், பேலியகொடை நகரில் அதிக மக்கள் தொகை அடர்த்தி காரணமாக, வீட்டுப் பிரச்சினை மற்றும் பல சமூக மற்றும் சுகாதார பிரச்சினைகள் எழுந்துள்ளன. பேலியகொடை நகரை இனிய நகரமாக மாற்றுவதுடன் மக்கள் எதிர்நோக்கும் வெள்ள அச்சுறுத்தலுக்கு தீர்வு காணுவதுடன் மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கும் உடனடியாக தீர்வு காணப்பட வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

# சின்னமுத்து தடுப்பூசி கட்டாயம்

■ நூருல் ஹுதா உமர்.



நாட்டில் தற்போது சின்னமுத்து நோய் சிறுவர்களிடயே வேகமாக பரவி வருவதால், குழந்தை பிறந்து 09 மாதங்கள் மற்றும் 03 வயதில் போடப்படும் தடுப்பு ஊசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் உடனடியாக ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

திங்கட்கிழமைகளில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையிலும், செவ்வாய்க்கிழமைகளில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும், புதன்கிழமைகளில் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திலும் குறித்த தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

# கிழக்கில் சோலார்

■ நூருல் ஹுதா உமர்

கிழக்கு மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான வரைபடத்தைத் திட்டமிடுதல், இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் அரசு அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள், மதத் தலங்களுக்கு இலவச சோலார் பேனல்களை நிறுவுவதற்கு காஞ்சன விஜயசேகர இணக்கம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் இடையிலான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.



# தர்ஷன் செல்வராஜாவுக்கு யாழில் கௌரவம்

■ பு. கஜிந்தன்

பிரான்ஸில் ஆண்டு தோறும் நடைபெறும் பிரெஞ்சுப் பாண் (baguette) தயாரிக்கும் போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை தமிழரான தர்ஷன் செல்வராஜாவை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள, யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பணிமனையில் இக்கௌரவிப்பு ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்றது.

இதன்போது தர்சனுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

உலகின் மிக பிரபல உணவுகளில் ஒன்றாக பிரெஞ்சுப் பாண் உள்ளது. இந்தப் போட்டியில், வெற்றியாளராக இவ்வாண்டு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட தர்ஷன், பாரிஸில் வாழ்ந்து வருகிறார். அங்குள்ள பேக்கரி ஒன்றில் பணியாற்றி வருகிறார். இந்த ஆண்டின் பிரெஞ்சு பாரம்பரிய சுவையான பாண் தயாரித்து இவ்வாண்டுக்கான வெற்றியாளராக மாறியுள்ளார்.

126 போட்டியாளர்களுடன் போட்டியிட்டு தர்ஷன் செல்வராஜா வெற்றிபெற்றுள்ளார். அதேவேளை, பிரான்ஸின் ஜனாதிபதி மாளிகையான எலிசேக்கு ஒரு வருடத்திற்கு தேவையான பாண் வழங்கும் வாய்ப்பும் தர்ஷனுக்கு கிடைத்துள்ளது.

**விற்பனைக்கு**

கொழும்பு, இராஜகிரிய வோட்டசேஜ் எல்லையில், வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு. சுற்றிவர நல்ல சுற்றாடல் உள்ளது. (பேர்ச் 13.31) அழையுங்கள்: 0778290068




## மன்னார், மருதமடு மாதாவின்
# ஆவணித் திருவிழா

மன்னார், மருதமடு மாதாவின் ஆவணி மாத திருவிழா திருப்பலி செவ்வாய்க்கிழமை (15) காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மடுமாதாவின் ஆவணி மாத பெருவிழா, ஒவ்வோர் ஆண்டும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி, மாதாவின் விண்ணேற்பு தினத்தன்று நடைபெறுகிறது.

இம்முறை ஆவணி மாத திருவிழா திருப்பலியை பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தலைமையில், மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் அன்றாடி ஆண்டகை,காலி மறைமாவட்ட ஆயர் றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட ஆயர் மெக்ஸ்வேல் சில்வா ஆண்டகை ஆகியோர் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனியும் திருச்சொரூப ஆசீர்வாதம் நடைபெற்றது.

குறித்த திருவிழா திருப்பலியில், மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் பி.கிறிஸ்து நாயகம் அடிகளார், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அரசியல் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சுமார் 5 இலட்சத்திற்கும் அதிகமானோர் கலந்து கொண்டு மடு அன்னையின் ஆசியை பெற்றனர்.

திருவிழா திருப்பலியை ஒட்டி, மடு திருத்தலத்தில் விசேட பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

எஸ். றொசேரியன் லெம்பேட்

# பிரச்சினைகளைத் தீர்த்து சவால்களை வெற்றிகொள்வோம்

எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தாங்கள் பயணிக்கும் பாதையில் எவ்விதமான சவால்களையும் எதிர்கொள்ள வில்லையெனில், ஒன்று மற்றொருவரின் அடிச்சுவட்டை பின்பற்றி பயணிக்கின்றார் அல்லது, புதுவகையான தேடல்கள் எவையும் அவரிடத்தில் இல்லை என்பதே அர்த்தமாகும்.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பல்வேறான சவால்களுக்கு முகங்கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றனர். அதில் பலரும் வெற்றிப்பெறுவர்; சிலர் தோல்வியை தழுவிக்கொண்டு அசந்துவிடுவர். அதில் ஒருசிலர் மீண்டும், மீண்டும் முயற்சிப்பர். அல்லது பாதையை மாற்றிக்கொண்டு பயணஞ்செய்வர்.

சவால்களுக்கு முகங்கொடுப்போரில் பலர், அடுத்தடுத்தக்கட்டம் தொடர்பில் முடிவெடுக்காது, இதுவே இறுதியான தீர்மானமாகுமென நினைத்து தங்களுயிரை மாய்த்துக்கொள்வர். நமது நாட்டை பொறுத்தவரையில் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளுதல் அண்மைய காலங்களில் அதிகரித்துள்ளது.

பரீட்சை, வாழ்க்கை, காதல், பொருளாதார தோல்வி இவற்றால் பலரும் தங்களுயிரை மாய்த்துக்கொள்கின்றனர். பேராதனை பல்கலைக்கழகத்தில் மட்டும் பலரும் இவ்வாறு தவறான முடிவுகளை எட்டியிருந்தனர். அவர்களிடத்தில் உளவியல் கல்வியை கொண்டு செல்லவேண்டும் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டிருந்தது.

சிறுவர்கள் முதல், குடும்பம் நடத்துவோரும் இவ்வாறு தங்களுயிரை மாய்த்துக்கொள்ளுதல் அதிகரித்துவிட்டது. பொருளாதார சிக்கல் காரணமாக அடுத்து என்ன செய்வதென சிந்திக்கும் பலரும் அடுத்தடுத்த கட்டங்களை நோக்கி அடியெடுத்து வைக்காது, தவறான முடிவுகளை எடுத்துள்ளனர். இது அவர்களை சார்த்தவர்களுக்கு பெரும் மனஉளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. ஆற்றலில் உள்ள குறைபாடுகள், தவறான முடிவுகளை எட்டுவதற்கு பிரதான பங்கை வகிக்கின்றன.

வெற்றி, தோல்வி சமமானவை என்பதை எடுத்தியம்பி மாணவர்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும். சவால்களை எதிர்கொள்வது குறித்து பெற்றோர்களிடத்தில், தெளிவுபடுத்த வேண்டும். மனதில் ஏற்படும் தாக்கத்தை சமாளிக்க வழிகள் உள்ளன என்ற புரிதலை அவர்களிடத்தில் ஏற்படுத்தவேண்டும். இவற்றை எல்லாம் பாடசாலை நிர்வாகமும் சமூக அமைப்புகளுமே முன்னின்று செய்யவேண்டும்.

பிரச்சினை என்பது மனித வாழ்க்கையில் ஓர் இயல்பான விடயமாகும். சிலவேளைகளில் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்தாலும் அது நிரந்தர தீர்வாக அமையாது. மீண்டும், மீண்டும் ஒரே பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடலாம்; துன்பத்துக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்படலாம்.

பிரச்சினை ஏற்படுவதற்கான காரணங்கள், பிரச்சினைகளால் ஏற்படும் தாக்கங்கள் உள்ளிட்டவற்றை சரியாக இனங்கண்டு, தீர்வை நோக்கி நகரவேண்டும். ஒவ்வொரு விடயத்திலும் கவனம் செலுத்தவேண்டும். அர்ப்பணிப்பின்மையையும் சோம்பலையும் தவிர்க்கவேண்டும். இவற்றின் ஊடாக, சில தவறான முடிவுகளுக்கு முயலுவதை தவிர்க்கலாம்.

தனிப்பட்ட வாழ்க்கையைப் போலவே சமூக வாழ்க்கையிலும் மனிதன் பல சவால்களுக்கு முகங்கொடுக்கின்றான். அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான சக்தியை அவனிடத்தில் வளர்ச்சி பெறச் செய்வது முக்கியமாகும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மாறும் தன்மையுடையவர்கள் நாங்கள் என்பதைப் புரிந்துகொள்வோம். மனிதன் முழுமையானவன் அல்லன். தனக்குள் இருக்கும் பலவீனங்களை உணர்ந்துகொண்டால், தன்னைத்தான் சிறிதுசிறிதாக மாற்றிவிட முயன்றுவென்றுவிடலாம்.

எதிலும் திருப்தி இல்லாத காரணங்களால், எங்களை நாங்கள் இழந்துவிடுகின்றோம். ஆசைகள் ஆபத்தானவை; அதைக் கண்டபடி அலையவிடுபவனே பெரும் அவஸ்தைப்படுகின்றான்.

கிடைத்ததே போதும் என எவர்தான் நினைக்கிறார்கள்? ஆனாலும், சாதாரண வாழ்வு சிறந்தது என நினைக்கும் எளிய வாழ்வு வாழ்பவர்கள், எளிமையானவற்றுகு மாறானவற்றையும் ஏற்றுக்கொள்வதில்லை.

சாந்தமாக வாழ்பவரை அநேகர் சீண்டிவிடுகின்றார்கள். வேண்டாத ஆசைகளை நெஞ்சில் விதைத்துவிடுவதும் உண்டு. இதை நம்பி, தெரியாத கருமங்களைச் செய்து, கைப்பொருளையும் இழந்துவிடுகின்றார்கள்.

படிப்படியாக தங்களை வளர்ப்பதே, புத்திசாதுரியம். யாவருக்கும் அறிவுண்டு. அதில் தெளிவுபடவும் முடியும். காலஅவகாசம் கொடுக்காமல் முடிவுசெய்க! காலத்துக்கு இசைந்து வாழ்க!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

---

13ஐப் பற்றிய விவாதம்:

# மாகாண சபைத் தேர்தலை ஒத்திப்போடவா?



எம்.எஸ்.எம் ஐயூப்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உண்மையிலேயே இலங்கையின் இனப் பிரச்சினையை தீர்க்க விரும்புகிறாரா? அந்த ஆர்வத்தில், அவர் தமது அரசியல் எதிர்காலத்தையும் ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்கிறாரா என்று சிலர் சிந்திக்கும் வகையிலேயே அவர் நடந்து கொள்கிறார்.

ரணில் விக்கிரமசிங்கவோ வேறு எந்தவொரு தலைவரோ இனப்பிரச்சினையை தீர்ப்பதாக இருந்தால், தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான பல உத்தரவாதங்களை வழங்கும் வகையில், நாட்டின் அரசியலமைப்பில் பல மாற்றங்களை செய்ய வேண்டும். அதனை அவருக்கு எதிரான சக்திகள், சிங்கள மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளாகவே எடுத்துரைப்பர். அது நிச்சயமாக அவரது அரசியல் எதிர்காலத்தைப் பாதித்துவிடும்.

ஏற்கெனவே தமது வாக்கு வங்கியை சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிடம் பறிகொடுத்துவிட்டு, தமது கடசிக்கு ஓர் ஆசனத்தை மட்டுமே பாராளுமன்றத்தில் வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினை என்ற ஆபத்தான விடயத்தில் கைவைத்து, மேன்மேலும் சிங்கள மக்களிடமிருந்து விலகிச் செல்ல விரும்புவாரா?

அவர் தமிழ் மக்களுக்கு சாதகமான வகையில் இனப்பிரச்சினையை தீர்த்தால், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். ஆயினும், அதே காரணத்தால் அவரை சிங்கள மக்கள் மேன்மேலும் வெறுப்பார்கள். சிங்கள மக்களின் வாக்குகளின்றி, இந்நாட்டில் எவரும் ஜனாதிபதியாக பதவிக்கு வரமுடியாது.

ரணில் விக்கிரமசிங்க போன்ற மூத்த அரசியல்வாதி ஒருவருக்கு அதை விளங்கிக் கொள்ள முடியாமல் இல்லை. அவ்வாறு இருக்க அவர் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில், அரசியலமைப்பை மாற்றி அமைப்பதாக இருந்தால், அவர் மிகப் பெரும் தியாக சீலராக இருக்க வேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே தற்போது அவர் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தைப் பற்றியும் பொதுவாக இனப்பிரச்சினையை தீர்ப்பது பற்றியும் பேசிக் கொண்டு இருக்கிறார். கடந்த புதன்கிழமை (09), அவர் முன்கூட்டியே அறிவித்துவிட்டு, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தைப் பற்றி பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தினார்.

“அதிகாரப்பகிர்வு பற்றிய சட்டத்தில் தெளிவு இல்லை. மத்திய அரசாங்கமும் மாகாண சபைகளும் சில அதிகாரங்களை பொதுவாக வைத்துக் கொண்டு இருக்கின்றன. இதனால் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. அதேவேளை, பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்குப் பதிலாக மென்மேலும் உக்கிரமடைகின்றன” என்று ஜனாதிபதி தமது அந்த உரையில் குறிப்பிட்டார்.

மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் அரசியலமைப்பில் உள்ள மாகாண சபை பட்டியல், ஒதுக்கப்பட்ட பட்டியல் (மத்திய அரசாங்கத்தின் அதிகார பட்டியல்) மற்றும் பொதுப் பட்டியல் ஆகியவற்றை ஆராய்து, அதிகாரங்களை மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் இடையே தெளிவாக பகிர்ந்தளிப்பதற்காக பிரதமர் தினேஸ் குணவர்தன தலைமையில் குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம், அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சட்டத் திருத்தங்களை செய்துவிட்டு, மாகாண சபைத் தேர்தல் தொடர்பான சட்டத்திலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட இருக்கின்றன. அந்த விடயத்தில் ஏற்கெனவே மூன்று ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். மீண்டும் மாவட்ட விகிதாசார தேர்தல் முறையை நடைமுறைப்படுத்தல், மாகாண சபைத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களும் போட்டியிட வசதி செய்து கொடுத்தல், மாகாண சபைகளில் 25 சதவீதம் பெண் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல் என்பவையே அந்த மூன்று ஆலோசனைகளாகும்.

இந்த ஆலோசனைகளுக்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்று, அவற்றை சட்டத்தில் சேர்த்து, மாகாண சபைகள் முறையாக நிறுவப்படும் வரை ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஆலோனை சபையை நியமிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். மாகாணத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாலோசனை சபையில் உறுப்பினர்களாவர். ஆளுநரும் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரும் அச்சபையின் இணை தவிசாளர்களாக கடமையாற்றுவர். ஆளுநர் மாகாண நிர்வாக விடயங்களில் நிறைவேற்றுத்துறைக்கு பொறுப்பாக இருப்பார். பாராளுமன்ற உறுப்பினர் சட்டமியற்றும் விடயங்களில் தலைமை தாங்குவார்.

ஐந்து அமைச்சுகள் வீதம் ஒன்பது மாகாண சபைகளிலும் 45 அமைச்சுகள் இருக்கின்றன. அவற்றுக்கு பாராளுமன்றத்தைப் போல் மேற்பார்வைக் குழுக்கள் நியமிக்கப் போவதாக ஜனாதிபதி கூறினார். தற்போது பாராளுமன்றத்தில் விசேட பொறுப்புகள் எதுவும் இல்லாமல் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அவற்றின் தவிசாளர்களாக நியமிக்கப்படுவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரம் பற்றிய விடயம் மிகவும் கடினமானதாகவும் சர்ச்சைக்கு உரியதாகவும் இருப்பதால், அந்த விடயத்தில் இப்போதைக்கு கைவைக்காமல், ஏனைய விடயங்கள் தொடர்பாக இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது நடைமுறைசாத்தியமானது என்று அவர் வாதிடுகிறார்.

அவரது உரையை அடுத்து, தமிழ் உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இந்தத் திருத்தங்களை மேற்கொள்ளும் முன்னர் ஏற்கெனவே ஆறு வருடங்களாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிய போது, இந்த மாற்றங்களைச் செய்துவிட்டே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

அதிகாரப்பகிர்வு பற்றிய சட்டத்தில் தெளிவு இல்லை. எனவே மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் அரசியலமைப்பில் உள்ள மாகாண சபை பட்டியல், ஒதுக்கப்பட்ட பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றை ஆராய்ந்து, அதிகாரங்களை மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் இடையை தெளிவாக பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் வாதத்தை ஏற்கத்தான் வேண்டும். ஆயினும், இது ஆயிரம் புதிய சர்ச்சைகளை மோற்றுவிக்கும் நடவடிக்கையாகும். ஆகவே, இது பல வருடங்கள் நீடிக்கும் விடயமாகும்.

அதேவேளை, இந்தச் சட்டத் திருத்தங்களை செய்துவிட்டு, மீண்டும் மாவட்ட விகிதாசார தேர்தல் முறையை நடைமுறைப்படுத்தல், மாகாண சபைத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களும் போட்டியிட வசதி செய்து கொடுத்தல், மாகாண சபைகளில் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல் போன்ற நோக்கங்களுக்காக, மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவிருக்கிறது. அந்தத் திருத்தங்களிலும் மாகாண சபைத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்கள் போட்டியிடுவது என்பது சர்ச்சைக்குரிய விடயமாகும்.

இதுபோன்ற இழுபறியான விடயங்களுக்குப் பின்னரே, மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று ஜனாதிபதி கூறும் போது, அதன் மூலம் அவரது நோக்கம் தெளிவாகிறது. அவர் மாகாண சபைத் தேர்தலை மேலும் ஒத்திப்போடவே முயல்கிறார். இந்தச் சட்டத்திருத்தங்களில் உள்நோக்கம் இல்லாவிட்டால், ஏற்கெனவே ஆறு வருடங்களாக ஒத்திவைக்கப்பட்டு இருக்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்திவிட்டு படிப்படியாக இந்தச் சட்டத் திருத்தங்களை அறிமுகப்படுத்தலாம்.

விகிதாசார முறைப்படி அத்தேர்தலை நடத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் முன்வைத்த தனிநபர் சட்டமூலத்துக்கு உயர்நீதிமன்றத்தின் அங்கிகாரமும் கிடைத்திருக்கிறது. அதனை நிறைவேற்றி தேர்தலை நடத்தலாம்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, 2017ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டமொன்றின் விளைவாகவே, மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலை ஒத்திப்போடவே அவர் அன்றும் அந்தச் சட்டமூலததை சமர்ப்பித்தார். எனவே, தாமதமின்றி மாகாண சபைத் தேர்தலை நடத்தும் தார்மிகக் கடமை அவருக்கு இருக்கிறது. இந்த நிலையிலேயே, அவர் இப்போது அத்தேர்தலை மேலும் ஒத்திப்போடும் வகையில் நடவடிக்கை எடுக்கப்போகிறார்.

ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனை சபை அமைக்கும் அவரது திட்டத்தின் மூலமும், மாகாண சபைத் தேர்தல் நீண்ட காலத்துக்கு ஒத்திவைக்கப்படப் போகிறது என்பது தெளிவாகிறது. விரைவில் தேர்தல் நடைபெறும் சாத்தியங்கள் இருந்தால், அவ்வாறான சிக்கல் நிறைந்த ஓர் அமைப்பு அவசியமாகாது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் ஏன் தேர்தல்களை ஒத்திவைக்க முயல்கின்றன என்பது ஒன்றும் புரியாத புதிர் அல்ல. ஐக்கிய தேசிய கட்சியும் ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் தேர்தல்களுக்கு அஞ்சுகின்றன. அவ்விரு கட்சிகளினதும் வாக்கு வங்கி தற்போது வெகுவாக சரிந்துள்ளது.

எனவே, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தைக் காட்டி, அரசாங்கம் மூன்று நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயல்கிறது.

முதலாவது, மாகாண சபைத் தேர்தலை நீண்ட காலத்துக்கு ஒத்திப் போடுவதாகும்.

இரண்டாவது, அதன் மூலம் நாட்டில் சர்ச்சைகளையும் இன முரண்பாடுகளையும் உருவாக்கி, தற்போதைய பொருளாதார பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதாகும்.

மூன்றாவது, இந்தச் சர்ச்சைகள் மூலம், எதிர்க்கட்சிகளிடையே பிளவுகளை தோற்றுவிப்பதாகும்.

---

## கடிதங்கள்

### பயிர்களுக்கு பகலில் நீர் வேண்டும்

கிளிநொச்சி, கண்ணகைபுரத்தின் வடக்கு பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு அக்கராயன் குளத்தின் நீர் கிடைப்பதில்லை என விவசாயிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மேட்டுப் பயிர்ச் செய்கைக் கிராமங்களில் ஒன்றாக கண்ணகைபுரம் கிராமம் காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் பயிர்ச் செய்கைக் கூட்டம் நடத்தப்பட்டு பயிர்ச் செய்கைகள் தொடங்கப்படும். அக்கராயன் குளத்தில் இருந்து நீர் விநியோகம் நடைபெறுவது வழமை.

இந்நிலையில், நீர் வாய்க்காலில் முதலில் ஈடுபடுகின்ற விவசாயிகள் பகலில் நீர்ப்பாசனம் செய்து கண்ணகைபுரத்தின் வடக்கில் உள்ள விவசாயிகளுக்கு இரவு வேளையில் நீரினை வழங்குவதன் மூலம், வடக்கு விவசாயிகள் நீரினை இரவு வேளையில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

ஆகையால், வடக்கு விவசாயிகளுக்கு பகல் வேளையில் நீர்ப்பாசனம் மேற்கொள்ளக் கூடிய வகையில் கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்



வவுனியாவில்

# நள்ளிரவில் நடந்த பயங்கரம்

ஒரு நேரடி ரிப்போட்

**க. அகரன்**

ஜூலை மாதம் 23ஆம் திகதி, வவுனியா, தோணிக்கல் பிரதேசம்; அந்த வீட்டில், அதிகப்படியான சந்தேசம் நிறைந்து காணப்பட்டது. அதற்குக் காரணம், அனைவரின் பாசத்துக்குப் பாத்திரமான மகளின் பிறந்தநாள் கொண்டாட்டமாகும். எனினும், அந்தக் குதூகலம் நீண்ட நேரம் நீடித்திருக்கவில்லை.

நேரம், நள்ளிரவு 12.05ஐ அண்மித்துக் கொண்டிருந்தது.... வீட்டுக்குள் நுழைந்த கூலிப்படை, அங்கிருந்தவர்களை வெட்டியும் குத்தியும் வீட்டுக்கு தீவைத்தும் படுபயங்கர கொடூர அட்டகாசங்களில் ஈடுபட்டது.

வவுனியாவில் வர்த்தகம் செய்யும் 'சுரேஸ்' என்கின்ற முஹமட் இக்ஸாட், தோணிக்கல்லில் தனது குடும்பத்தினருடன் வசித்து வந்தார். அவருடைய மகளான 19 வயதான பாத்திமா சஜானாவுக்கு, இரவு 12 மணிக்கு கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாட, தனது நண்பர்கள், உறவினர்கள் என சிலரை வீட்டுக்கு அழைத்திருந்தார்.



பி. அம்பாவில, பிரதி பொலிஸ் மாஅதிபர்

கொழும்பில் இருந்து வந்து, அந்த வீட்டில் தங்கியிருந்த இக்ஸாட்டின் சித்தி, சித்தியின் கணவன் மற்றும் மகளான 21 வயதான பாத்திமா சசீமா சைனி, அவருடைய கணவன் சுகந்தன் ஆகியோரும் அன்றைய தினம் சஜானாவின் பிறந்தநாளைக் கொண்டாடிக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், இரவு 12.05 மணியளவில் வீட்டின் முன் வாயில் கதவு (கேற்) தட்டப்பட்டது. வீட்டின் உரிமையாளரான 'சுரேஸ்', தனது மகளுக்கு 'சப்பிரைஸ் கிப்ட்' வந்துள்ளதாக நினைத்து, முன் கதவை திறந்து பிரதான வாயிலுக்கு சென்றிருந்தார். கூடவே, அவரின் மனைவியும் சசீமா சைனியின் தாயாரும் சென்றிருந்தனர்.

வாயில் கதவை திறந்ததும், அங்கு முகமூடி அணிந்திருந்த 10 இற்கும் மேற்பட்டவர்கள் "சுகந்தன் எங்கே" எனக் கேட்டனர். இதனால் அச்சமடைந்த 'சுரேஸ்', "எற்காக சுகந்தனைத் தேடுகின்றீர்கள்; நீங்கள் யார்" எனக் கேட்ட, மறுகணமே அவர் மீது வாள் வெட்டு விழுந்தது. இதனையடுத்து 'சுரேஸ்', ஓடிச்சென்று தனது வீட்டில் ஒளிந்து கொண்டார். அவருடன் கூடவே சென்ற மற்றைய இரண்டு பெண்களும் பயத்தில் கத்தியுள்ளனர்.

இந்நிலையில், வீட்டின் முன் கதவு திறந்து காணப்படவே, வீட்டுக்குள் சென்ற கூலிப்படை, வீட்டில் இருந்தவர்களை வெளியேறுமாறு கூறி, சுகந்தனைத் தேடியுள்ளனர். இதன்போது, பிறந்தநாளை கொண்டாடிக்கொண்டிருந்தவர்கள், என்ன நடக்கின்றது என்பதை உணர முடியாத நிலையில், பயத்தால் உறைந்து, அறைகளுக்குள் ஒளிந்துகொண்டனர்.

இதன்போது, பெற்றோல் மற்றும் ஒயில் கலந்த கலன்களுடன் வந்த கூலிப்படை வீட்டுக்குத் தீவைத்தனர். இந்நிலையில் அறைக்குள் ஒளித்திருந்த சுகந்தன், தனது மனைவியை அழைத்துக்கொண்டு வெளியேறியபோது, வீட்டின் முன்புறம் அதிகளவில் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. சுகந்தனின் மனைவியான சசீமா சைனி, தடக்கி விழுந்துவிடவே, அவரைத் தூக்குவதற்கு சுகந்தன் முயன்றுள்ளார். எனினும், அது சாத்தியப்படாத நிலையில், சுகந்தனிலும் தீபற்றியது. அதனால் தனது மனைவியை தூக்கும் முயற்சியை கைவிட்டுவிட்டு, வெளியில் சென்று மண்ணில் புரண்டு தீயை அணைக்க முயன்றுள்ளார்.

இதற்கிடையில், அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடிவந்தபோது, வீடு முழுமையாக



தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. இந்நிலையில், அறைகளுக்குள் ஒளித்து இருந்தவர்களை மீட்பதற்கு கடும் பிரயத்தனம் மேற்கொண்டு, அவர்களை மீட்டெடுக்க முயலும்போதே, பொலிஸாருக்கும் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவுக்கும் தகவலை அயலவர்கள் வழங்கினர்.

எரியும் வீட்டுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்பதில் அயலவர்கள் ஈடுபட்டு, மூன்று வயது முதல் 46 வயது வரையான ஒன்பது பேரை தீக்காயங்களுடன் மீட்டனர்.

இந்நிலையில், வீட்டுக்கு தீ வைத்த கும்பல் தப்பியோடி இருந்தது. வீட்டுக்குள் விழுந்து கிடந்த சசீமா சைனியை எவரும் காணாததால், அவர் வீட்டுக்குள்ளேயே தீக்காயம் மற்றும் மூச்சு திணறலால் மரணித்த நிலையில், தீயணைப்பு படையினரால் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் உட்பட வவுனியா மாவட்ட பதில் நீதிவான் த. ஆர்த்தி ஆகியோர் நேரடியாக விஜயம் செய்து பார்வையிட்டிருந்தனர்.

இந்நிலையில், சுகந்தன் (35 வயது), பாத்திமா சஜானா (19 வயது), தேவராணி (33 வயது), தாரணி (46 வயது), சுதர்சினி (46 வயது), ஆக்ஸட்டினா (ஏழு வயது), தர்வின் சுதர்சினி, தனுசா, முஹமட் இக்ஸாட் (40 வயது) ஆகியோர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் கடும் காயங்களுக்குள்ளான சுகந்தன், வவுனியா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னர், யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட மறுநாள் மரணமடைந்தார்.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்தனர். சி.சி.ரி.வி காணொளிகளை முதலில் ஆராய்ந்தபோது, வீட்டின் வெளியில் இருந்த சி.சி.ரி.வி கமெரா உடைக்கப்பட்டிருந்ததுடன் வீட்டின் உட்பகுதியில் இருந்த கமெராக்களும் செயற்பட்டிருக்கவில்லை. இந்நிலையில், அயல் வீடுகளில் உள்ள சி.சி.ரி.வி கமெராக்களை பரிசோதித்தபோது, முகமூடியும் கையுறையும் அணிந்த சிலர், கைகளில் கலன்கள், வாள்களுடன் வரிசையாக நடந்து வருவதையும் பின்னர் அவர்கள் தப்பிச் செல்வதையும் கண்டுகொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக, பிரதி பொலிஸ் மாஅதிபர் பி. அம்பாவிலவின் கண்காணிப்புடன் உதவி பொலிஸ் அத்தியட்சகர் களுஆராச்சியின் ஆலோசனையில், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிநடத்தலில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் கஜேந்திரன், பிராந்திய குற்றப்புலனாய்வு பிரிவு பிரதான பொலிஸ் பரிசோதகர் அழகியவண்ண தலைமையிலான பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்தன. இதையடுத்து, தோணிக்கல் பகுதியில் உள்ள மயானத்தில் இருந்து கையுறை, கல்வனைஸ் பைப் என்பன, மோப்ப நாயின் உதவியுடன் மீட்கப்பட்டன.

பிரதி பொலிஸ் மாஅதிபர் பி. அம்பாவில, வவுனியா பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக தலைமையில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்ட நிலையில், பிராந்திய குற்றப்புலனாய்வு பிரிவு, சிவில் புலனாய்வு பிரிவு என்பன விசாரணைகளை முன்னெடுத்தன.



இந்தக் குற்றச்செயலுக்கான திட்டம், தவசிகுளம் குளக்கட்டுப்பகுதியில் இருந்து திட்டமிடப்பட்டதாக பொலிஸாருக்கு தகவல் கசிந்த நிலையில், குறித்த கிராமத்தில் விசாரணைகளை பொலிஸார் தீவிரப்படுத்தினர். இவ்வேளை, குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு தொலைபேசி அழைப்பொன்று கிடைக்கப்பெற்றது. இத்தொலைபேசி அழைப்பு, அப்பகுதியில் பல குற்றங்களைச் செய்திருந்த ஒருவருடைய அழைப்பாக இருந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக, தனக்கு சில தகவல்கள் தெரியும் என அவர் தெரிவித்திருந்தார்.

குற்றத்தடுப்பு பொலிஸார் அவரிடம் நேரடியாகத் தகவல்களைப் பெற்றபோது, பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன. இதன் பிரகாரம், குறித்த இடத்துக்கான அலைபேசி கோபுரத்தின் ஊடான அழைப்புகள் தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகள், மரணடைந்த சுகந்தன் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படை மற்றும் அந்தக் கிராம மக்கள் வழங்கிய தகவல் என்பவற்றின் அடிப்படையில் சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

தவசிகுளம் பகுதியில் வைத்து, 31 ஆம் திகதி முதலாவது சந்தேக நபர் கைது செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக, நான்கு பேர் கைதாகினர். இந்நிலையில், இச்சம்பவத்தை செய்வதற்காக ஒப்பந்தம் மேற்கொண்ட நபர், வவுனியாவில் இருந்து தப்பி ஓடியிருந்தார். கைதுசெய்யப்பட்டவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், மோட்டார் சைக்கிள்கள், அலைபேசிகள் என்பன மீட்கப்பட்டன.

இந்நிலையில், மிகுதி விசாரணைகளை குற்றப்புலனாய்வு பிரிவுக்கு ஒப்படைக்கமாறு பொலிஸ் மாஅதிபர் உத்தரவிட்ட நிலையில், குற்றப்புலனாய்வு பிரிவினர் குறித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ள தொடங்கினர்.

இதன் பிரகாரம், சந்தேக நபர்களை தடுப்பு காவலுக்கு எடுத்து, விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், ஐந்து வாள்கள், கையுறைகள் உட்பட சில எரிக்கப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேலும் விசாரணைகளை மேற்கொள்வதற்காக, நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, ஒரு நாள் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து, உயிரிழந்த சுகந்தனின் நண்பராக இருந்த ஒருவர், பிரதான சந்தேக நபராக தேடப்பட்டு வந்த நிலையில், இம்மாதம் மூன்றாம் திகதி கைது செய்யப்பட்டு, வவுனியா நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, ஒரு நாள் தடுப்பு காவல் உத்தரவை பெற்று விசாரணை செய்யப்பட்டார்.

விசாரணைகள் முடிவடைந்து, வைத்திய பரிசோதனைகளின் பின்னர், நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், 11ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டு, அநுராதபுரம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

கடந்த, 11ஆம் திகதி அடையாள அணிவகுப்பு இடம்பெற இருந்தபோதிலும், சாட்சி சிகிச்சை பெற்று வருவதால் அவர் நீதிமன்றத்துக்கு வர முடியாமையால், அடையாள அணிவகுப்பு பிற்போடப்பட்டதுடன், சந்தேக நபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் வவுனியா நீதிவான் உத்தரவு வழங்கியிருந்தார்.

குறித்த சம்பவம், பெண் விவகாரத்தால் சம்பவித்தது என்று தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், போதைப்பொருள் வியாபாரமும் சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்குமா என்பது தொடர்பிலான சந்தேகமும் மக்கள் மத்தியில் நிறைந்து காணப்படுகின்றது.

ஏனெனில், மரணமடைந்த சுகந்தனும் பிரதான சந்தேக நபராக கைதானவரும் அடிதடி மற்றும் சமூக விரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தமையையும் மக்கள் மறுப்பதற்கில்லை.

எது எவ்வாறாயினும், சட்டம் தன் கடமையை செய்யும் நிலையில், தனி நபர்கள் தீர்ப்பு வழங்கும் 'ரவுடீஸ' போக்கு, ஒழுக்கமுள்ள சமூகத்துக்கு ஏற்புடையதல்ல. எனவே, உண்மையான குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை நீதியினூடாக பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே இலங்கையர்களின் கோரிக்கையாகும்.



# கனடாவில் காரைதீவு ஒன்றுகூடல்








கனடா வாழ் காரைதீவு மக்கள் ஒன்றிய வருடாந்த ஒன்றுகூடல் சனிக்கிழமை (12) ரொரன்ரோவில் நடைபெற்றது.
அங்கு, விளையாட்டு விழாவும் இடம்பெற்றது. வைத்திய கலாநிதி அ. வரதராசா, பேராசிரியர் இ.பாலசுந்தரம், பொறியியலாளர் கணேசராஜா விதுசன் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர். ஒன்றுகூடல் நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்கும் வெற்றிபெற்றவர்களுக்கும் நினைவுப்பரிசுகளும் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வி.ரி சகாதேவராஜா

# சிறுவர் சந்தை






கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் கண்காட்சியும் சிறுவர் சந்தையும் திங்கட்கிழமை (14) நடைபெற்றது.

ஒலுமுதீன் கியாஸ்

# கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கலும்





கிளிநொச்சி, முல்லைத்தீவு படை முகாம்களின் தளபதிகளின் ஏற்பாட்டில் புதுகுடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட உடையார் பகுதியில் வாழ்கின்ற பொதுமக்களுக்கு 68ஆவது படைப்பிரிவின் ஒருங்கமைப்பில் தாய்லாந்து சுஜி பௌத்த சங்கத்தால் கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கலும் ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெற்றது.

மு. தமிழ்செல்வன்

புதுடெல்லி

# “தேசத்தின் கனவுகளை நனவாக்குவேன்”



அடுத்த 5 ஆண்டுகளில் உலகின் மிகப் பெரிய 3 பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா திகழும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டின் 77வது சுதந்திர சுதந்திர தினமான நேற்று (15) புதுடெல்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிய பிரதமர் நாட்டு மக்களுக்க உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா தற்போது உலகின் முன்னணி நாடாகத் திகழ்கிறது. எனது குடும்பத்தில் உள்ள 140 கோடி மக்கள் இன்று (நேற்று) சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறார்கள். நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அனைவருக்கும் நான் எனது அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

மணிப்பூர் மக்களுக்கு ஆதரவாக நாடு இருக்கிறது. அங்கு அமைதி நிலவ வேண்டும். அமைதியின் மூலமே தீர்வு காண முடியும். தீர்வு காண்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. இம்முறை இயற்கைப் பேரிடர் நாட்டின் பல பகுதிகளில் கற்பனை செய்ய முடியாத பாதிப்புகளை உருவாக்கி இருக்கிறது. இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் எனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று, நம்மிடம் மக்கள்தொகை, ஜனநாயகம், பன்முகத்தன்மை ஆகியவை உள்ளன. இவை, தேசத்தின் கனவுகளை நனவாக்கும் திறன் கொண்டவை. நான் கடந்த ஆயிரம் ஆண்டுகளைப் பற்றி பேசுகிறேன். ஏனெனில், நமது நாட்டிற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு இருப்பதை நான் காண்கிறேன். இந்த காலகட்டத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதும், நாம் நமது அடிகளை எவ்வாறு வைக்கிறோம் என்பதும், ஒன்றன்பின் ஒன்றாக நாம் எவ்வாறு நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்பதும் வரும் ஆயிரம் ஆண்டுகளில் நாடு பொன்னான காலத்தைப் படைக்கும் என்றார்.



மயிலாடுதுறை

## சூரிய ஒளிக்கதிர் மூலம் காந்தியை வரைந்த இளைஞன்

மயிலாடுதுறை மாவட்டம், திருவிழந்தூர் தோப்பு தெருவை சேர்ந்தவர் விக்னேஷ் (வயது 30). இவர் தனது திறமைகளால் பல்வேறு ஓவியங்களை சூரிய ஒளிக்கதிர் மூலம் பூதக்கண்ணாடியால் மரப்பலகையில் குவித்து ஓவியம் வரைந்து வருகிறார்.

அதாவது பூதக்கண்ணாடி மூலம் மரப்பலகையில் சூரிய ஒளிக்கதிர்களை உருவத்துக்கேற்ப பாய்ச்சுவார். அப்போது உருவ வடிவத்திற்கு ஏற்ற மாதிரி நெருப்பு பிடிக்கும். பின்னர் நெருப்பு பற்றிய இடத்தில் கரி படிந்து உருவம் பிறக்கும். இதன்பின் பஞ்சை வைத்து துடைத்து உருவத்துக்கு இறுதி வடிவம் கொடுப்பார். இந்த முறைக்கு ‘பர்னிங் வுட் ஆர்ட்’ என்று பெயர்.

இந்தியாவிலேயே இவர் ஒருவர் மட்டும்தான் இந்த முறையில் ஓவியம் வரைந்து வருகிறார் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் அவர் சுதந்திர தினத்தை நினைவு கூறும் வகையில் மகாத்மா காந்தியின் உருவபடத்தை தனது திறமைகளால் சூரிய ஒளிக்கதிர் மூலம் மரப்பலகையில் வரைந்து அசத்தி உள்ளார். மேலும், அவர் வரைந்த ஓவியத்தை வீடியோவாக பதிவு செய்து அதனை இணையதளத்திலும் பதிவிட்டுள்ளார். இந்த ஓவியம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.




உத்தரபிரதேசம்

## இன்ஸ்டகிராமால் நிகழ்ந்த விபரீதம்

உத்தரபிரதேச மாநிலம் லக்னோவின் பாரா பகுதியை சேர்ந்த தொழில் அதிபர் ராகுல் மிஸ்ரா(வயது37). இவருக்கு மனைவியும், 12 வயதில் ஒரு மகளும், 5 வயதில் மகனும் உள்ளனர்.

ராகுலின் மனைவிக்கு சமூக வலைதளங்களை பயன்படுத்துவதில் அதிக ஈடுபாடு இருந்துள்ளது. இன்ஸ்டாகிராமில் கணக்கை தொடங்கி பதிவுகள் போட்டு வந்துள்ளார். அவரது பதிவுகளுக்கு அதிக லைக்குகள் மற்றும் பின்தொடர்வோர் அதிகமானோர் உருவாகியுள்ளனர்.

இது ராகுலுக்கு தெரியவந்து. அவரும் இன்ஸ்டாகிராம் கணக்கு வைத்திருந்தார். தன்னைவிட அதிக பின்தொடர்வோர் மனைவிக்கு இருக்கிறார்களே என்ற தாழ்வு மனப்பான்மை அவருக்குள் ஏற்பட்டது. மேலும் பின்தொடர்வோரில் சிலர் மனைவியை சந்திப்பதாகவும் சந்தேகப்பட்டார்.

குழந்தைகள் கண் முன்னே மனைவியின் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார்.

அமெரிக்கா

# புட்டிப்பாலில் மதுவை ஊற்றிக் கொடுத்த தாய்



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள சென் பெர்னார்டினோ நகரில் வசிக்கும் 37 வயதாகும் ஹானஸ்டி டீ லா டோரி, காரில் சென்று கொண்டிருந்தபோது அவரது குழந்தை தொடர்ந்து அழுது கொண்டே இருந்துள்ளது. கைவசம் பால், பால் பவுடர் ஏதும் இல்லாத நிலையில், அங்கிருந்த மதுவை புட்டிப்பாலில் ஊற்றிக் கொடுத்துள்ளார். குழந்தையும் பசி தாங்க முடியாமல் மது நிறைந்த பாட்டிலை குடித்து அழுகையை நிறுத்தியுள்ளது.

இந்நிலையில், வழக்கமாக நடத்தப்பட்ட வாகன சோதனையின்போது தாயாரின் செயல்கள் சந்தேகம் ஏற்படுத்தியதை தொடர்ந்து பொலிஸார் குழந்தையை ஆய்வு செய்தனர். அதில் குழந்தையும் போதையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு தாயிடம் விசாரணை நடத்தினர்.

இதில் அவர் உண்மையை ஒப்புக்கொண்டதையடுத்து அவரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர். குழந்தை மருத்துவமனையில் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

வடகொரியா

## கிம் ஜாங் அன் அதிரடி உத்தரவு



அமெரிக்காவும், தென்கொரியாவும் ஆண்டுதோறும் கொரிய தீபகற்ப பகுதியில் கூட்டுப்போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. அதன்படி மாத இறுதியில் இந்த ஆண்டுக்கான போர்ப்பயிற்சி நடைபெற உள்ளது. ஆனால் இதனை போருக்கான நடைமுறை என கருதும் வடகொரியா இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்தநிலையில் வடகொரியாவில் உள்ள வெடிமருந்து தயாரிப்பு தொழிற்சாலையில் ஜனாதிபதி கிம் ஜாங் அன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது கவச வாகனங்கள், பீரங்கிகள் போன்றவற்றை பார்வையிட்ட அவர் நவீன ஏவுகணைகள் மற்றும் பிற ஆயுதங்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, அவற்றை விரைந்து செய்து முடிக்க அவர் இராணுவத்துக்கு உத்தரவிட்டதாக அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சீனா

## ஒரு நாள் கணவன்

சீனாவில் உள்ள ஹெபெய் மாகாணத்தில் இருக்கும் கிராமங்களில் ஒரு நாள் மட்டும் திருமணங்கள் பரவலாக அதிகரித்துள்ளன. இறந்த பிறகு தங்கள் மூதாதையருடன் சென்று சேர வேண்டும் என்பதற்காக இவர்கள் ஒரு நாள் திருமணம் செய்து கொள்கின்றார்கள்.

அங்குள்ள வழக்கத்தின் படி ஏழையாக, திருமணம் கூட செய்ய முடியாத நிலையில் இருக்கும் ஆண்கள் உயிரிழந்தால் அவர்களின் குடும்ப கல்லறையில் அவர்களைப் புதைக்க முடியாது. இதனால் ஏற்படும் பாவம் பல தலைமுறைகளுக்குத் தொடரும் என அவர்கள் நம்புகிறார்கள்.



எல்.பி.எல்:

# பி-லவ் கண்டியை வென்ற தம்புள்ள ஓறா

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பி-லவ் கண்டியுடனான போட்டியில் தம்புள்ள ஓறா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தம்புள்ள ஓறா

தம்புள்ள ஓறா: 162/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அவிஷ்க பெர்ணாண்டோ 41 (27), பென் மக்டர்மூட் 37 (23), சதீர சமரவிக்கிரம 31 (26), ஹெய்டன் கெர் 26 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: நுவான் பிரதீப் 3/35 [4], முஜீப் உர் ரஹ்மான் 2/32 [4], சத்துரங்க டி சில்வா 1/21 [4], வனிடு ஹஸரங்க 1/33 [4])

பி-லவ் கண்டி: 142/10 (19.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் 50 (46), அஞ்சலோ மத்தியூஸ் 26 (15), இசுரு உதான 23 (21), வனிடு ஹஸரங்க 19 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: தனஞ்சய டி சில்வா 4/6 [2], பிரமோத் மதுஷன் 2/27 [3.4], சஹிந்த ஜயதிலகே 1/22 [4], ஷஹ்னவாஸ் டஹானி 1/25 [4])

போட்டியின் நாயகன்: தனஞ்சய டி சில்வா

பாடுமீன் கிரிக்கெட் சமரில்

## மட்டு வின்சன்ட் உயர்தரப் பாடசாலை முடிசூடியது

■ வ. சக்தி

பாடுமீன் கிரிக்கெட் சமரானது கடந்த மூன்று ஆண்டுகளின்பின் நடைபெற்ற நிலையில் மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தரப் பாடசாலை முடிசூடியது.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற புனித சிசிலியா மகளிர் கல்லூரியுடனான 10ஆவது பாடுமீன் கிரிக்கெட் சமரிலேயே வெற்றி பெற்று வின்சன்ட் முடிசூடியது.

இப்போட்டியானது 20 ஓவர்களை கொண்ட மென்பந்தாட்டப் போட்டியாக அமைந்த நிலையில், நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய வின்சன்ட் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 157 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய புனித சிசிலியா 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களையே பெற்று மூன்று ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இப்போட்டியின் சிறந்த வீராங்கனையாகவும், சிறந்த துடுப்பாட்ட வீராங்கனையாகவும் வின்சன்ட் அணித்தலைவி சானுஜா கமலேஸ்வரன் தெரிவாகியதுடன், சிறந்த பந்துவீச்சாளராக சிசிலியாவின் ஈ. மெருஷா தெரிவாகினார்.





கிழக்கில் மீண்டும் சதுரங்கத்தில் சரித்திரத்துடன்

## தேசிய மட்டத்தில் கல்முனை சாஹிரா

■ அஸ்ஹர் இப்றாஹிம்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க போட்டியில் ஆண்களுக்கான அனைத்து வயது பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தை வென்று மீண்டும் வரலாற்று சாதனையை புரிந்து, கிழக்கின் சதுரங்க ஜம்பவான்கள் என கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி மாணவர் மீண்டும் நிரூபித்துள்ளனர்


திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் சாஹிரா 17வயதுக்குட்பட்ட பிரிவிலும், 20வயதுக்குட்பட்ட பிரிவிலும் சம்பியனாகி தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

20 வயதுப் பிரிவில் ஐ.எம். சயான் ஷாஹி, எம். என். ஷஹீன் அஹமட், எம்.ஏ. தமீம், எம்.ஏ.ஏ. அதீப், எம்.ஏ.ஏ. அழ்பர், எம். கே.ஏ.எஸ். அனாப், ஏ.எம். சப்கி ஆகியோரும், 17 வயதுப் பிரிவில் ஐ.எம். சம்லி ஷாஹி, ஏ.எஸ்.ஏ. மிஜ்வாத், எம். என்.எம். றீமாஸ், ஐ.கே.எம். ஆகில் கான், எம்.இஸட். எம். சனீப், எம்.ஜே.ஐ. சஹ்மி ஆகியோரும் போட்டியில் கலந்து கொண்டனர்.

அல் ஹிலாலுக்கு

## நெய்மரை விற்க இணங்கிய பரிஸ் ஸா ஜெர்மைன்

சவுதி அரேபியக் கழகமான அல்-ஹிலாலுக்கு தமது முன்களவீரரான நெய்மரை அண்ணளவாக 90 மில்லியன் யூரோக்கள் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளுக்கு விற்க பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் இணங்கியுள்ளது.





## டெஸ்ட்களிலிருந்து ஓய்வு பெற்றார் ஹஸரங்க

இலங்கையின் சுழற்பந்துவீச்சாளரான வனிடு ஹஸரங்க, தனது 26ஆவது வயதில் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

வெளிநாடுகளில் நடைபெறும் தொடர்களில் பங்கேற்கும் பொருட்டே இம்முடிவுக்கு ஹஸரங்க வந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

இலங்கையின் டெஸ்ட் குழாமில் தொடர்ச்சியாக இடம்பெற்றிருக்காத ஹஸரங்க, நான்கு போட்டிகளில் நான்கு விக்கெட்டுகளையே கைப்பற்றியிருந்தார்.

இலங்கையின் முன்னாள் அணித்தலைவரான திஸர பெரேரா இவ்வாறு டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு



பெற முனைந்தபோது அதைத் தடுத்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை, 16 ஓகஸ்ட் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.